**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 1** |
| **Name** | : | **திரு. சந்திரசேகரன்** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.07.2022**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மகாலிபட்டி ரோட்டில் குடியிருந்து வருகிறேன். சொந்தமாக தொழில் நடத்திவருகிறேன். எனக்கு மொத்தம் 3 பிள்ளைகள். 2 பெண் பிள்ளைகள் மற்றும் 1 ஆண்பிள்ளை உள்ளார்கள். எனது மூத்தமகள் பெயர் பொன்மலர் ஆகும். 2 வது மகள் பெயர் கலைசெல்வி. 3 வது பையன் பெயர் பொன்முருகன். மனைவி பெயர் கிரிஜா ஆகும். எனது மனைவி தான் இந்த வழக்கில் புகார் கொடுத்தார். எனது மனைவி சுமார் 3,4 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது மூத்தமகளை தூத்துக்குடிமாவட்டம், நாகலாபுரத்தில் உள்ள காமாட்சிபாண்டியன் என்ற ரமேஷ் என்பவருக்கு கல்யாணம் செய்து கொடுத்தோம். திருமணத்தில் 100 பவுன் நகை, 2 1/2 கிலோ வெள்ளி ஜாமான்கள், பணம் ஒரு லட்சமும், அது போக சீர் வரிசை பண்ட பாத்திரங்கள் செய்தோம். மாப்பிள்ளைக்கு 10 பவுன் நகை போட்டோம். மாப்பிள்ளை பெங்களூரில் IT யில் Software கம்பெனியில் வேலை பார்த்தார். எனது மூத்தமகள் பொன்மலர் M.Sc. M.Phil படித்துள்ளார். எனது மகளை 04.01.2005 அன்று திருமணம் செய்து .....

கொடுத்தோம். எனது மகள் திருமணத்திற்கு பிறகு பெங்களுரில் சென்று குடும்பம் நடத்தினார் ஒரு வருடத்திற்குள்ளாகவே எனது மருமகன் எனது மகளை கொடுமைப்படுத்துவதாகவும், குடும்ப செலவுக்கு பணம் கொடுப்பதில்லை என்றும் போன் செய்து சொன்னார். நாங்கள் கொடுத்துவிடும் பணத்தையும் எனது மருமகனின் வங்கியில் வாங்கி போட்டுக்கொள்வார். ஒரு வருடம் கழித்து எனது மகள் எங்கள் வீட்டிற்கு வந்தார். தனது கணவர் தன்னை ரெம்ப கொடுமைப்படுத்துவதாகவும், பணம் கேட்டு மென்டல் டார்ச்சர் செய்வதாகவும் சொன்னார். எங்கள் வீட்டு சைடும், எனது மருமகன் வீட்டு சைடும் சமாதானம் பேசி குடும்பம் நடத்த அனுப்பிவைத்தோம். அவங்க கொடுமை தாங்காமல் எனது மகள் பெங்களுரில் இருக்கும் போது தூக்க மாத்திரை சாப்பிட்டு, பெங்களுரில் உள்ள அப்பலோ மருத்துவமனையில் சேர்த்து, 3 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை அளித்தோம். பின்னர் எங்கள் வீட்டிற்கு மதுரைக்கு எனது மகளை கூப்பிட்டு வந்துவிட்டோம். அதன் பிறகு நாங்கள் கேஸ் போட்டோம். குடும்ப நல கோர்ட்டில் கேஸ் போட்டோம். கேஸ் நடந்து கொண்டிருந்த போது, எனது மருமகன் வீட்டில் சமாதானமாக பேசி, கேஸ் வேண்டாம் என்றும், குடும்ப நடத்தலாம் என்றும் சொன்னார்கள். அதன் பேரில் நாங்களும் கேசை வாபஸ் வாங்கிகொண்டு, மறுபடி வாழட்டும் என்று சேர்த்துவைத்தோம். கேஸ் வாபஸ் வாங்கிய பிறகு எனது மருமகன் எங்கள் வீட்டிற்கே வந்து எனது மகளை அடித்து தகராறு செய்தார். அதனால் மறுபடி நாங்கள் கேஸ் போட்டோம். மறுபடியும் குடும்பநல கோர்ட்டில் விவாகரத்து வழக் குபோட்டோம். அந்த வழக்கில் Exparty ஆக தீர்ப்பாகிவிட்டது. அதற்கு பிறகு எனது மருமகன் அந்த வழக்கை மறுபடி ஓபன் செய்து கேஸ் போட்டார். எனது மகள் அவருடன் சேர்ந்து வாழ முடியாது என்று சொன்னதால் Domestic Violence கேஸ் போட்டோம். அந்த கேஸ் தற்போதும் நீதிமன்றத்தில் நடந்துகொண்டுதான் உள்ளது. அதில் ஜீவனாம்சம் பணம் ரூ.20,000/- மாதம் தோறும் கொடுக்க வேண்டும் என்று

தீர்ப்பானது. ஆனால் எனது மருமகன் எதுவும் பணம் கொடுக்கவில்லை. அதற்கு பிறகு எதிரி மீண்டும் கேஸ் போட்டதால் எனது மகள் மனஉளைச்சலில் இருந்தார். எதிரியுடன் சேர்ந்து வாழமுடியாது என்று எனது மகள் மிகவும் மனஉளைச்சலுக்கு ஆளானார். 18.01.2010 அன்று எனது மகள் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு தற்கொலை செய்து கொண்டார். அவர் தற்கொலை செய்து கொண்ட நேரம் நான் மண்டேலாநகர் வரை சென்றிருந்தேன். அப்போது எனது மனைவி எனக்கு சுமார் 11.15 மணியளவில் போன் செய்தார். நான் 1/2 மணி நேரத்தில் அங்கிருந்து வந்துவிட்டேன். வந்து பார்த்தபோது, எனது மகள் உள்ளே இறந்து கிடந்தார். பின்னர் போலிசார் வந்து விசாரணை செய்தார்கள். எனது மகள் எங்கள் வீட்டின் முன்பக்க அறையில் இறந்துகிடந்தார். பின்னர் AC வெள்ளைத்துரை அவர்கள் வந்து விசாரணை செய்தார். எனது மனைவியிடம் வாக்குமூலம் வாங்கினார். எனது மகள் இறப்புக்கு எனது மருமகன், அவருடைய அப்பா ஜெயராம், அம்மா ஜீவா ஆகியோர் தான் காரணம் ஆவார்கள். எனது மகள் அவரது இறப்பிற்கு முன்பு அவரது கைப்படி ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தார். அந்த கடிதத்தை நாங்கள் போலிசாரிடம் கொடுத்தோம். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்கள். போலிசார் எனது மகளின் கடிதத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்காக எங்களிடம் ஒப்பம் ஒன்று கொடுத்தார்கள். எனது மகள் பெங்களுரில் இருந்த போது தூக்கமாத்திரை போட்டு தற்கொலைக்கு முயன்றதற்கு எடுத்துக்கொண்ட மருத்துவ சிகிச்சைக்கான அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை போலிசார் விசாரணையின் போது கொடுத்துள்ளோம். **குடும்ப நல நீதிமன்றத்தில் எனது மகள் விவாகரத்து கேட்டு தாக்கல் செய்த சான்றிட்ட நகல் அதசாஆ.1 ஆகும்.** நீதித்துறை நடுவர் எண்.4 நீதிமன்றத்தில் Domestic Violence கேஸ் போட்ட மனு **சான்றிட்ட நகல் அதசாஆ.2 ஆகும்.** என் மகள் இறப்பதற்கு முன்பாக எழுதிய கடிதம் **அதசாஆ.3 ஆகும்.** என்னிடம் காட்டப்படும் நீள நோட்டு **அதசாஆ.4 ஆகும்.** அதில் உள்ள எழுதித்துக்கள் எனது மகள் எழுதியது தான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்

மனைவி கொடுத்தது தான். **அது அதசாஆ. 5 ஆகும்.** அதில் என் மனைவியின் கையெழுத்து உள்ளது. நானும் அதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். **எனது சாட்சி கையெழுத்து அதசாஆ.6 ஆகும் .** எனது மகள் இறந்து கிடந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட மண்ணெண்ணெய் கேன் **அசாபொ.1 ஆகும்.** அதில் மண்ணெண்ணெய் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை.

<u>2 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு றுக்கு விசாரணை</u>

அப்பலோ மருத்துவமனையில் பெங்களூரில் எனது மகளுக்கு 3 நாட்கள் மருத்துவ சிகிச்சை எடுத்த விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். புகாரில், குறிப்பிட்டு, 2 முதல் 4 எதிரிகள் குடும்பத்தை சார்ந்த யாரும் வரதட்சணை கேட்டு கொடுமை படுத்தியதாக சொல்லவில்லை என்றால் தற்போது ஞாபகம் இல்லை. கடைசியாக குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து அதன் பிறகு சுமார் 1 3/4 வருடம் இறந்த என் மகள் எங்கள் வீட்டில் தான் இருந்தார். அதற்கு முன்பாக இரண்டு முறை எனது சம்பந்தி, எதிரிகள் 2,3 ஆகீயோர் சமாதான பேச்சுவார்த்தைக்காக எனது வீட்டிற்கு வந்துள்ளார்கள். முதன் முதலில் விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த போதும் அதன் பிறகும் ஆக மொத்தம் 2 முறை 2,3 எதிரிகள் சமாதானம் பேச எனது வீட்டிற்கு வந்தார்கள். RDO என்னை விசாரணை செய்த போது, எனது வாக்குமூலத்தில் 2 முதல் 4 எதிரிகள் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். RDO விசாரணையின் இறுதி அறிக்கையில் 1 வது எதிரியைத் தவிர 2 முதல் 4 எதிரிகள் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

சம்பவத்திற்கு எத்தனை நாட்கள் கழித்து எனது மகள் இறப்பிற்கு முன்பு எழுதிய தற்கொலை கடிதம் கிடைத்தது என்றால் எனது மகள் இறந்த மறுநாள் நாங்கள் வீட்டை சுத்தம் செய்யும் போது கிடைத்தது. உடனே சுமார் 02.00 மணியளவில் RDO விடம் அந்த கடிதத்தினை கொடுத்தோம். அந்த கடிதத்தில் எந்த தேதியும் குறிப்பிடப்படவில்லை. RDO அவர்களிடம் இந்த கடிதத்தை நான் கொடுத்தபோது காவல்துறையினரும் அங்கு இருந்தார்கள். நான் உதவி ஆணையர் வெள்ளைத்துரை அவர்கள் சம்பவத்தன்று வந்திருந்தார். ஒரு வாரம் கழித்து என்னை விசாரித்தார். அவ்வாறு என்னை உதவி ஆணையர் விசாரணை செய்த போது, எனது மகளின் தற்கொலை கடிதத்ததைப் பற்றி சொல்லியுள்ளேன். நான் தற்கொலை கடிதம் பற்றி உதவி ஆணையரிடம் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கை வழுவூட்ட வேண்டும் என்பதற்காக பின்னாளில் போலிசார் சொல்லிக்கொடுத்து எனது மகள் எழுதியதாக தற்கொலை கடிதத்தை தயார் செய்து போலிசாரிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நீளநோட்டினை RDO அவர்களிடம் அதசஆ.4 நோட்டை காட்டிய பிறகு, 21 ம் தேதி, சம்பவம் நடந்த 2 நாட்கள் கழித்து ஒப்படைத்தேன். 2 வது எதிரிஜெயராமும் 3 வது எதிரி அவரது மனைவியும் தூத்துக்குடி மாவட்டத்தில் நாகலாபுரம் என்ற கிராமத்தில் பல வருடங்களாக வசித்து வருகீறார்கள். 4 வது எதிரி நாகராஜன் பெங்களுரில் தனியாக வீடு எடுத்து சம்பவத்திற்கு முன்பும், பின்பும் வாழ்ந்து வகிறார். 4 வது எதிரி, 1 வது எதிரியின் பெரியப்பா பையன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக காவல்துறை எத்தனை முறை எங்கு வைத்து என்னை விசாரணை செய்தார்கள் என்றால் எனது வீட்டிலும், காவல்நிலையத்திலும் வைத்து என்னை விசாரணை செய்தார்கள். எனது மகள் விவாகரத்து வழக்கு தாக்கல் செய்தது பிறகு இருந்தே மனஉளைச்சலில் இருந்தார். எனது மகளுக்கு குழந்தை இல்லை என்ற மன வருத்தம் இருந்தது. மருத்துவ சிகிச்சையில் 1 வது எதிரிக்கு போதுமான உடல்நிலை இல்லை என்று

குறிப்பிட்டிருந்தார்கள் என்றால் சரியல்ல. எனது மகளைத்தான் மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து சென்றோம். 1 வது எதிரியைக் கூப்பிட்டோம். ஆனால் அவர் மருத்துவ பரிசோதனைக்கு வரவில்லை. சமாதான பேச்சுவார்த்தைக்கு பிறகு 2 முதல் 4 எதிரிகளிடம் எந்த தொடர்பும் இல்லாமல் இருந்தது என்றால் சரிதான். 2 வது எதிரி ஜெயராம் மட்டும் என்னிடம் பேசினார். இந்த வழக்கிற்கும் 2 முதல் 4 எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. அவர்கள் 1 வது எதிரியின் அப்பா, அம்மா மற்றும் 4 வது எதிரி 1 வது எதிரியின் உறவினர் என்பதால் பொய்யாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது மகள் மிகவும் மன வேதனையாக இருந்ததாலும், சரியான சூழ்நிலை இல்லாமல் இருந்ததாலும் Hyper sensitive ஆக இருந்ததால் எனது மகள் தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கை வழுவூட்டுவதற்காகத்தான் தற்கொலை கடிதத்தினை பின்னிட்டு தயார் செய்து கொடுத்தால் தான் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஒப்பிட்டு செய்ய அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 126/ 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | திரு. பொன்முருகன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.07.2022**

## முதல் விசாரணை :

நான் மதுரை, தெற்குவாசல், மகாலிபட்டிரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் B.Sc. Computer Science படித்துள்ளேன். எனது மூத்த அக்கா பெயர் பொன்மலர். நான் எனது அப்பா வைத்துள்ள சைக்கிள் கடையைப் பார்த்து வருகிறேன். எதிரிகளைத் தெரியும். 18.01.2010 அன்று காலை சுமார் 10.45 மணியிருக்கும். எனது அம்மா எனக்கு போன் செய்தார். அக்கா கதவை பூட்டிக்கொண்டு கதவைத் திறக்கமாட்டேன் என்கிறாள் என்று சொன்னார். எனது மூத்த அக்கா பொன்மலரை தூத்துக்குடி மாவட்டம், நகலாபுரத்தை சேர்ந்த ஜெயராம் மகன் ரமேஷ் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். 04.11.2005 அன்று திருமணம் செய்து கொண்டுத்தோம். திருமணத்தின் போது எனது அக்காவுக்கு 100 பவுன் நகையும், 2 1/2 கிலோ மதிபுள்ள வெள்ளி பொருட்களும், பணம் ஒரு லட்சமும், மாப்பிள்ளைக்கு பிரேஸ்லெட், செயின் போட்டோம். அது போக பண்ட பாத்திர சீர்வரிசைகள் செய்தோம். திருமணத்திற்கு பிறகு 3 மாதங்கள் கழித்து பெங்களூருக்கு சென்றார். 3 மாதங்களாக தூத்துக்குடி மாவட்டம்

நாகலாபுரத்தில் இருந்தார். பெங்களூர் சென்ற பிறகு கொஞ்ச நாளில் இருந்தே பிரச்சனை செய்தார். செலவுக்கு காசு கொடுக்கச் சொல்லி 1 வது எதிரி கேட்டுள்ளார். எனது அப்பா அனுப்பும் பணத்தையும் 1 வது எதிரி வாங்கி தனது வங்கி கணக்கில் போட்டு வைத்துக்கொண்டுள்ளார். ஆயிரம் ரூபாய் மட்டும் செலவுக்கு கொடுத்து பார்த்துக்கொள் என்று 1 வது எதிரி சொல்லியுள்ளார். இரவு 10.30 மணிக்கு 1 வது எதிரி எனது அக்கா பொன்மலரிடம் சண்டை போடுவார். பணம் கேட்டு பிரச்சனை செய்வார். எனது அக்கா எங்களுக்கு போன் செய்து சொல்லி அழுவார். எனது அக்காவை எங்களுக்கு போன் செய்யக்கூடாது என்று பிடுங்கி வைத்துக்கொள்வார். ஏதாவது பிரச்சனை என்று எனது அக்கா எங்களுக்கு சொல்லிவிடக் கூடாது என்பதற்காக போனை பிடுங்கிவைத்துக்கொள்வார். ஏதாவது வேண்டும் என்றால் மட்டும் போனை கொடுப்பார். பெங்களூரில் இருந்த போது எனது அக்கா பொன்மலர் தற்கொலை முயற்சி செய்துவிட்டார். அதனால் எனது அம்மாவும் அப்பாவும் பெங்களூருக்கு சென்றார்கள். அதற்கு பிறகு 1 வது எதிரியின் குடும்பத்தாரை கூப்பிட்டு சமாதானம் பேசினார்கள். சமாதானம் பேசி எனது அக்காவை பெங்களூருக்கு 1 வது எதிரியுடன் அனுப்பிவைத்தோம். ஆனாலும் அங்கு போன பிறகும் 1 வது எதிரி பணம் கேட்டு பிரச்சனை செய்து கொண்டுதான் இருந்தார். இதற்கு மேல் பிரச்சனை செய்தால் எனது அக்காவுக்கு ஏதாவது ஆகிவிடும் என்று பயந்து எனது அப்பா எனது அக்கா பொன்மலரை எங்கள் வீட்டிற்கு கூப்பிட்டு வந்துவிட்டார். இங்கே கூட்டிவந்த பிறகு 1 வது எதிரி எனது அக்காவுக்கு போன் செய்து ஏதாவது சொல்லி டார்ச்சர் செய்து கொண்டே தான் இருந்தார். போனை கட் செய்தாலும் land line எண்ணிற்கு போன் செய்து டார்ச்சர் செய்து கொண்டேதான் இருந்தார். எனது அக்கா 1 வது எதிரியிடம் எதுவாக இருந்தாலும் எனது அப்பாவிடம் பேசிக்கொள்ளுங்கள் என்று சொல்லியும் 1 வது எதிரி எனது அப்பாவுக்கு பேசாமல் எனது

அக்காவிற்கு போன் செய்து டார்ச்சர் செய்து கொண்டே தான் இருந்தார். பின்னர் எனது அக்கா குடும்ப நல நீதிமன்றத்தில் விவாகரத்து கேட்டு கேஸ் போட்டார். கேஸ் போட்ட பிறகு, 1 வது எதிரி இனிமேல் இப்படி செய்யமாட்டேன் என்று சொல்லி கேஸை வாபஸ் வாங்க சொன்னார். இனிமேல் சரியாக நடந்து கொள்கிறேன் என்று சொல்லி ஒரு வாரம் 1 வது எதிரி எங்கள் வீட்டில் தங்கியிருந்தார். அந்த ஒரு காலத்திலும் 1 வது எதிரி மீண்டும் பிரச்சனை செய்து சண்டை போட்டு விட்டு கிளம்பி போய்விட்டார். பின்னர் கோர்ட்டில் Exparty யாக தீர்ப்பானது. அதன் பிறகு 1 வது எதிரி கேஸை reopen செய்யச்சொல்லி High Court ல் கேஸ் போட்டதால் எனது அக்கா பொன்மலர் மிகவும் மனஉளைச்சலுக்கு ஆள் ஆகிவிட்டார். எனது அக்காவின் மனதை மாற்றவேண்டும் என்று எனது அக்காவை எங்கள் கடைக்கு அழைத்து வந்தார். அதன் பிறகு கோர்ட்டில் கேஸிக்காக வரப்போக இருந்ததால் எனது அக்கா மிகவும் மன உளைச்சலாகவே தான் இருந்து வந்தார்- பின்னர் 18.01.2010 அன்று காலை எனது அப்பா ஒரு function க்கு போக வேண்டும் என்று கிளம்பி கொண்டு இருந்தார். அதனால் என்னை கடையைத் திறக்கச் சொல்லியிருந்தார். அதனால் நான் கடையைத்திறந்துவிட்டு உட்கார்ந்து இருந்த போது அன்று காலை சுமார் 1.00, 10.30 மணியளவில் எனது அம்மா எனக்கு போன் செய்தார். போன் வந்த உடனே நான் எங்கள் வீட்டிற்கு போனேன். நான் வீட்டிற்கு போகும் போதே எனது அக்காவின் ரூம் கதவு பூட்டி இருந்ததை பக்கத்து வீட்டுக்காரர்கள் உடைத்து வைத்திருந்தார்கள். நான் உள்ளே சென்று பார்த்த போது எனது அக்கா உடல் கருகி தீ காயங்களுடன் இறந்து கிடந்திருந்தார். கொஞ்ச நேரத்தில் எனது அப்பாவும் தகவல் தெரிந்து வந்துவிட்டார். அதன் பிறகு போலிஸ் ஸ்டேசனில் கம்ளெயின்ட் கொடுத்தோம். அதசாஆ.5 புகார் எனது அம்மா கொடுத்த புகார் ஆகும். அதை எனது அப்பா எழுதினார். அதில் உள்ள கையொப்பம் எனது அம்மாவின் கையெழுத்து தான். எனது அப்பா

சாட்சி கையெழுத்து போட்டுள்ளார். என்னிடம் காட்டப்படும் அதசாஆ.3,4 எனது அக்கா எழுதிய எழுத்துக்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>2 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

அதசாஆ.5 புகாரில் என் மருமகன் ரமேஷ் மற்றும் அவரது குடும்பத்தாரிடம் இருந்து பணமோ பொருளோ கேட்டு தொந்தரவு செய்யவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசாஆ.3,4 சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்த போது சொல்லியுள்ளேன். அதசாஆ.3 ல் எனது அக்கா சொல்லியுள்ள வார்த்தை குறிப்பாக, responsible what ever happen for me என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் அதில் எந்த சம்பவத்தை குறித்து குறிப்பாகவோ, பணம் கேட்டதாகவோ, கொடுமைப்படுத்தியதாகவோ குறிப்பிடவில்லை. எனது அக்கா தாக்கல் செய்த DVC வழக்கில் ஜீவனாம்சமாக பணம் ரூ.20,000/-ஐ 1 வது எதிரி கொடுக்கவேண்டும் என்று உத்தரவு போட்ட பிறகும் 1 வது எதிரி பணம் கொடுக்கவில்லை என்ற மன வருத்தம் எனக்கு அக்காவிற்கு இருந்தது என்றால் சரியல்ல. 1 வது எதிரி மீண்டும் Exparty வழக்கினை reopen செய்தது குறித்து தான் என் அக்காவிற்கு மனவருத்தம் இருந்தது. நான் call centre ல் கடந்த 2009 ம் வருடம் வேலை பார்த்தேன். சம்பவத்தின் போது எனது அப்பாவின் கடையில் 2009 ம் ஆண்டு பாதியிலிருந்தே வேலை செய்கிறேன். நீதித்துறை நடுவர் எண்.4 நீதிமன்றத்தில், எனது அக்கா பொன்மலர் கடந்த 2009 ம் ஆண்டு அதசாஆ.2 வழக்கு தாக்கல் செய்திருந்தார். விவாகரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இருந்தே எனது அக்கா பொன்மலர் எங்கள் வீட்டில் தான் இருந்து வந்தார். சுமார் 2, 2 1/2 வருடங்களாக எனது அக்கா இறப்பதற்கு முன்பு எங்கள்

வீட்டில் தான் இருந்து வந்தார். சாட்சி சந்திரமோகன் எனது சித்தப்பா ஆவார். சாட்சி மாரியப்பன், முத்துக்குமார், பாலகுரு ஆகீயோர் எனது உறவினர் என்றால் சரியல்ல. அவர்கள் எங்கள் குடும்ப நண்பர்கள். இந்த வழக்கில் எனது அக்கா எழுதியதாக சொல்லப்படும் அதசாஆ.3,4 ஆகியவை பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. உதவி ஆணையர் என்னை முதன் முறையாக எனது அக்கா இறந்த அன்று காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்கள். அதசாஆ.3 ஐ எத்தனை நாட்கள் கழித்து போலிசாரிடம் கொடுத்தோம் என்றால் 2,3 நாட்கள் கழித்து கொடுத்தோம்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை